**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 72/2015**
**வழக்கு சாட்சி. அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | டாக்டர்.மணிமொழி | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | கண்ணன் | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் | **வயது :** | 50 /2024 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

**<u>27.11.2024</u>**

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், பலவான்குடி கிராமத்தில் உள்ள தாய் சேய் நல அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.11.2014 ஆம் தேதியன்று மாலை 04.30 மணிக்கு நான் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்த போது பரவாக்கோட்டை கிராமத்தினை சேர்ந்த ஒரே குடும்பத்தினை சார்ந்த மூன்று நபர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார்கள். அவர்களில் தங்கவேலு த/பெ.சின்னையா என்பவர் என்னிடம் அன்றைய தினம் மதியம் 02.30 மணிக்கு பரவாக்கோட்டை பள்ளிக்கூடம் அருகில் வைத்து தெரிந்த நபர்கள் கட்டையால் அடித்ததாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவரது தலையின் இடது புறத்தில் 2x0.5x0.5 செ.மீ. அளவில் கிழிந்த காயம் ஒன்றும், இடது பின்புற கையில் வீக்கமும் காணப்பட்டது. அவரது தலை மற்றும் கையில் அடிபட்டிருந்ததால் சி.டி. ஸ்கேன் எடுப்பதற்காக அவரை புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன்.

2) அங்கு தங்கவேலுக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படத்தின் மூலம் அவரது இடது கையில் $5^{th}$ Meta Carpel Bone Fracture காணப்பட்டிருப்பது தெரியவந்தது. அதன் அடிப்படையில் தங்கவேலு என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று அளித்தேன். சாட்சியால் தங்கவேலு என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட **விபத்து பதிவேடு அ.சா.ஆ.2** ஆகவும், காயச்சான்று **அ.சா.ஆ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சம்பவத்தில் காயம்பட்டதாக கூறி சிகிச்சைக்காக வந்த ரெங்கசாமி த/பெ.தங்கவேலு என்பவரும் என்னிடம் அன்றைய தினம் மதியம் 02.30 மணிக்கு பரவாக்கோட்டை பள்ளிக்கூடம் அருகில் வைத்து தெரிந்த நபர்கள் கட்டையால் அடித்ததாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவரது வலது தோள்பட்டையில் வீக்கம் காணப்பட்டது. அவருக்கு வலது தோள்பட்டையில் வலி இருப்பதாகவும் தெரிவித்தார். வலது பின் தோள்பட்டையில் சிராய்புக்காயம் காணப்பட்டது. அவரது வலது தோள்பட்டையில் வீக்கம் காணப்பட்டதால் நுண்கதிர் படம் எடுப்பதற்காக அவரை புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன். அங்கு ரெங்கசாமிக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படத்தின் மூலம் அவரது வலது தோள்பட்டையில் எலும்பு முறிவு எதுவும் காணப்படவில்லை என்பது தெரியவந்தது. அதன் அடிப்படையில் ரெங்கசாமி என்பவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்று வழங்கினேன். சாட்சியால் ரெங்கசாமி என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட **விபத்து பதிவேடுட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) மேற்படி சம்பவத்தில் காயம்பட்டதாக கூறி ராஜேந்திரன் த/பெ.தங்கவேல் என்பவரும் என்னிடம் அன்றைய தினம் மதியம் 02.30 மணிக்கு பரவாக்கோட்டை பள்ளிக்கூடம் அருகில் வைத்து தெரிந்த நபர்கள் கட்டையால் அடித்ததாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவரது தலையில் 2x0.5x0.5 செ.மீ. அளவில் கிழிந்த காயமும், அவரது இடது முன்கையில் வீக்கமும் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்று வழங்கினேன். சாட்சியால் ராஜேந்திரன் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட **விபத்து பதிவேடுட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னிடம் சிகிச்சைக்காக வந்த மூவரும் தனித் தனியாக தங்களுக்கு காயம் எவ்வாறு ஏற்பட்டதென கூறினார்களா அல்லது அவர்களில் ஒரு நபர் கூறினாரா என்றால், மூவரும் தனித் தனியாக கூறினார்கள். மூவருமே தாங்கள் கட்டையால் தாக்கப்பட்டதாகத்தான் கூறினார்கள் என்றால், சரிதான். என்னிடம் சிகிச்சைக்காக வந்த மூவருக்கும் காயம் ஏற்பட்டதாக கூறப்படும் நேரத்திலிருந்து இரண்டு மணி நேரம் கழித்துதான் என்னிடம் சிகிச்சைக்காக வந்திருந்தார்கள் என்றால், சரிதான்.

2) நான் சிகிச்சை அளித்த தங்கவேலுக்கு வெளிப்படையான ரத்தக்காயம் ஏதும் இருந்ததா என்றால், தலையில் இருந்தது. ஒரு நபருக்கு காயத்தின் காரணமாக ரத்தம் வெளிவந்தால் அது 1 முதல் 3 நிமிடங்களுக்குள் உறைந்துவிடும் என்றால், சரிதான். தங்கவேலுக்கு புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் எடுக்கப்பட்டதாக கூறப்படும் நுண் கதிர் படத்தினை நான் பார்வையிட்டு காயச்சான்று வழங்கினேனா அல்லது எலும்பு முறிவு மருத்துவரின் கருத்துரையின் அடிப்படையில் காயச்சான்று வழங்கினேனா என்றால், எலும்பு முறிவு மருத்துவரின் கருத்துரையின் அடிப்படையில் காயச்சான்று வழங்கினேன். தங்கவேலுக்கு தலையில் ஏற்பட்ட காயம் கூர்மையான இரும்பு கம்பிகளில் மோதிக்கொள்வதால் ஏற்பட வாய்புள்ளது என்றால், சரிதான். தங்கவேலுக்கு கையில் ஏற்பட்ட வீக்கமானது அவர் தரையில் கீழே விழும்போது அவரது கை வேகமாக தரையில் படும்போது வீக்கக்காயம் ஏற்பட வாய்புள்ளது என்றால், சரிதான்.

3) ரெங்கசாமிக்கு ஏற்பட்ட சிராய்புக்காயம் மற்றும் வீக்கம் சொரசொரப்பான பகுதிகளில் மோதிக்கொள்வதினால் ஏற்பட வாய்புள்ளது என்றால், சரிதான். ராஜேந்திரனுக்கு ஏற்பட்டதாக கூறப்படும் வீக்கம் சொரசொரப்பான பகுதிகளில் மோதிக்கொள்வதினால் ஏற்பட வாய்புள்ளது என்றால், சரிதான்.

**மறுவிசாரணை**:

இல்லை